பிரஸார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

02 07 2024 6 30

செய்தி ஆசிரியர்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டிற்கு முதலிடம் மற்றும் ஊழலை முற்றிலுமாக அகற்றுவது ஆகிய கொள்கைகளை மத்திய அரசு தொடர்ந்து கடைபிடிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
2. எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி நேற்று மக்களவையில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி பிஜேபி சார்பில் அவைத்தலைவரிடம் நோட்டீஸ் அளிக்கப்பட்டுள்ளது.
3. இலங்கை கடற்படையினரால் நேற்று கைது செய்யப்பட்ட 25 தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.
4. இளநிலை நீட் தேர்வு முறைகேடு தொடர்பான மனுக்களை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு இம்மாதம் எட்டாம் தேதி விசாரணைக்கு எடுத்துக் கொள்கிறது.
5. ஜிம்பாப்வேவுக்கு எதிரான டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்க உள்ள இந்திய அணி இன்று ஹராரே புறப்பட்டு சென்றது.

*--- இனி விரிவான செய்திகள்---*

**[]<<<>>>[]**

நாட்டிற்கு முதலிடம் மற்றும் ஊழலை முற்றிலுமாக அகற்றுவது ஆகிய கொள்கைகளை கடைபிடிப்பதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

மக்களவையில் இன்று குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலுரை வழங்கிய பிரதமர், மக்களின் நம்பிக்கையை பெற்றதால்தான் மக்களவைத் தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி அமைந்ததாகத் தெரிவித்தார்.

அனைவருக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்ற கொள்கையை அரசு பின்பற்றி வருவதாகவும், யாரையும் போலியாக திருப்திபடுத்தும் எண்ணம் தங்களுக்கு இல்லை என்றும் அவர் கூறினார்.

அவையில் நடைபெற்ற இந்த விவாதத்தின்போது, அக்னிவீர் திட்டம் குறித்தும், விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை குறிததும் எதிர்க்கட்சிகள் சார்பில் தவறான தகவல்கள் அளிக்கப்பட்டதாக அவர் குறை கூறினார். கடந்த பொதுத்தேர்தலில் மக்கள் முதிர்ச்சியுடனும், தேர்ந்த அறிவுடனும் வாக்குகளை அளித்ததாக அவர் புகழாரம் சூட்டினார்.

கடந்த பத்து ஆண்டுகளில் அரசு எடுத்த கொள்கை முடிவுகளில் நம்பிக்கை வைத்துள்ளதால்தான் மூன்றாவது முறையாக தேசிய ஜனநாயகக் கூட்டணியை மக்கள் மத்தியில் ஆட்சியில் அமர்த்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அனைவரின் பங்களிப்பில் அனைவருக்குமான வளர்ச்சி என்ற தாரக மந்திரத்துடன் அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

[]<<<>>>[]

மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி நேற்று தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக பிஜேபி சார்பில் அவைத்தலைவர் திரு ஓம் பிர்லா-விடம் நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது.

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பேசிய திரு ராகுல்காந்தி, உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிட்டதாக பிஜேபி உறுப்பினர் திரு பன்சூரி ஸ்வராஜ் அளித்த நோட்டீஸில் குறிப்பிட்டுள்ளார்.

திரு ராகுல்காந்தி பேசியது உண்மையை மறைத்து திசை திருப்பும் வகையில் அமைந்துள்ளதாகவும், அது தொடர்பான தேவையான நடவடிக்கைகளை அவைத்தலைவர் எடுக்க வேண்டுமென்றும் அந்த நோட்டீஸில் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே திரு ராகுல்காந்தி அவைத்தலைவர் திரு ஓம் பிர்லாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில், நேற்று தாம் தெரிவித்த கருத்துக்களின் பல பகுதி அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டிருப்பதாகவும், மக்கள் நலன் கருதி எதிர்க்கட்சிகள் சார்பில் தாம் தெரிவித்த அந்த கருத்துக்களை மீண்டும் அவைக்குறிப்பில் சேர்க்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 25 தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மத்திய அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், பாக்-ஜலசந்தி மற்றும் மன்னார் வளைகுடா கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்த் 25 மீனவர்களையும் நேற்று இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளதாகக் கூறியுள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

1974-ஆம் ஆண்டு மத்திய அரசு இலங்கையுடன் மேற்கொண்ட கச்சத்தீவு ஒப்பந்தத்திற்குப் பிறகு தமிழக மீனவர்களின் உரிமைகள் மற்றும் நலன்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய உரிமைகளை நிலைநாட்டும் வகையில் இடையூறு விளைவித்து வரும் கச்சத்தீவு பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கான உறுதியான நடவடிக்கையை வெளியுறவுத்துறை அமைச்சகம் மேற்கொள்ள வேண்டுமென்றும் திரு மு க ஸ்டாலின் அந்த கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழ்நாடு மாநில சட்ட ஆட்சிமொழி ஆணையத்தின் மூலமாக தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட 100 சட்ட புத்தகங்களை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று சென்னையில் வெளியிட்டார்.

இந்த ஆணையத்தின் மூலம் 100 சட்டங்களை புத்தக வடிவில் வெளியிட அரசு நடவடிக்கை மேற்கொண்டதாகவும், அதன்படி 37 மத்திய சட்டங்கள், 63 தமிழ்நாடு சட்டங்களில் 43 மறுபதிப்பு செய்யப்பட்ட சட்டங்கள், 20 புதிய பதிப்பு செயப்ப்பட்ட சட்டங்கள் வெளியிடப்பட்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் தேர்வு முறைகேடு தொடர்பான மனுக்களை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சந்திரசூட் தலைமையிலான அமர்வு இம்மாதம் எட்டாம் தேதி விசாரணைக்கு எடுத்துக் கொள்கிறது.

கோடை விடுமுறை முடிந்தவுடன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் இந்த மனுக்கள் தலைமை நீதிபதி தலைமையிலான, அமர்வு விசாரிக்கவுள்ளது. நீதிபதிகள் திரு பார்திவாலா, திரு மனோஜ்மிஸ்ரா ஆகியோர் இந்த அமர்வில் இடம்பெற்றுள்ளனர்.

நீட் தேர்வு கேள்வித் தாள்கள் வெளியானது, இந்த ஆண்டு இளநிலை நீட் தேர்வை ரத்து செய்துவிட்டு, மீண்டும் நடத்துவது, தேசிய தேர்வு முகமையின் செயல்பாடுகள் குறித்து புலனாய்வு விசாரணை செய்வது உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய பல்வேறு தரப்பு மனுக்களும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**[]<<<>>>[]**

தமிழக சட்டப்பேரவையில் பேசுவதற்கு எதிர்க்கட்சிகளுக்கு கூடுதல் நேரம் வழங்கப்படுவதாக பேரவைத் தலைவர் திரு அப்பாவு தெரிவித்துள்ளார்.

நெல்லையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அவை நிகழ்ச்சிகள் அனைத்தும் தொலைக்காட்சிகளுக்கு வழங்கப்பட்டு வருவதாகக் கூறினார்.

கேள்வி நேரம் அனைத்தும் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பு செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மாஞ்சோலை விவகாரம் தொடர்பான வழக்கு தற்போது நீதிமன்றத்தில் உள்ளதாகவும், இந்த வழக்கில் அரசு தரப்பிலான கருத்துக்கள் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்படும் என்றும் திரு அப்பாவு கூறினார்,

[]<<<>>>[]

பெரியாறு பிரதான கால்வாய் பாசனப் பகுதிகளுக்கு முதல்போக சாகுபடிக்காக வைகை அணையிலிருந்து நாளை முதல் தண்ணீர் திறந்துவிடப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

நாள் ஒன்றுக்கு வினாடிக்கு தொள்ளாயிரம் கன அடி வீதம் 45 நாட்களுக்கும், முறைவைத்து 75 நாட்களுக்கும் தண்ணீர் திறந்துவிடப்படும் என்றும் அரசு செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்மூலம் திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள சுமார் 45 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும்.

[]<<<>>>[]

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையத்தின் இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடப்பு கரீப் பருவ பயிர் காப்பீட்டு திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் இம்மாதம் 31-ஆம் தேதி வரை பதிவு செய்யலாம் என ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

தேனி மாவட்டத்தில் உள்ள 130 ஊராட்சிகளிலும் சிறப்பு கிராம சபைக் கூட்டம் இன்று நடைபெற்றது.

[]<<<>>>[]

திருப்பத்தூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் இன்று நடைபெற்றது. இதில் 185 மாற்றுத் திறனாளிகளுக்கு தேசிய அடையாளஅட்டைகளை ஆட்சியர் திரு தர்ப்பகராஜ் வழங்கினார்.

[]<<<>>>[]

சேலம் மாவட்டம் வீரபாண்டி ஒன்றியத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை ஆட்சியர் திருமதி பிருந்தா தேவி இன்று ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

சிவகங்கை மாவட்டத்தில் கல்வி உதவித்தொகைப்பெற மாணவர்கள் வரும் 15-ஆம் தேதிக்குள் அஞ்சலகங்களில் கணக்கு தொடங்க வேண்டுமென மாவட்ட அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் திரு மாரியப்பன் அறிவுறுத்தியுள்ளார்.

**[]<<<>>>[]**

பழனி மலைக்கோவிலை சுற்றி பொதுமக்களை அச்சுறுத்தி வந்த குரங்குகளை பிடித்து அடர்ந்த வனப்பகுதிகளில் விடப்பட்டு வருவதாக வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் சாலையோர வனப்பகுதிகளில் புலிகள் நடமாட்டம் இருப்பதால் அப்பகுதிகளில் உள்ள மக்கள் கவனமாக பயணிக்குமாறு வனத்துறை அறிவுறுத்தியுள்ளது.

**[]<<<>>>[]**

ஜிம்பாப்வேவுக்கு எதிரான டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்கேற்க உள்ள இந்திய அணி இன்று ஹராரே புறப்பட்டு சென்றது.

அணியின் கேப்டனாக சுப்மன் கில் செயல்படுவார் என்றும், இடைக்கால பயிற்சியாளராக வி வி எஸ் லஷ்மண் செயல்படுவார் என்றும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

ஜிம்பாப்வேயில் வரும் ஆறாம் தேதி முதல், 14-ஆம் தேதி வரை நடைபெறும் ஐந்து டுவெண்டி – டுவெண்டி போட்டிகளில் இரு அணிகளும் பங்கேற்கின்றன.

ஜிம்பாப்வே-க்கு எதிரான முதல் இரண்டு போட்டிகளில் இந்த அணியில் இடம்பெற்றுள்ள சஞ்ஜு சாம்சன், சிவம் தூபே, ஜெய்ஸ்வால் ஆகியோருக்குப் பதிலாக, சாய் சுதர்சன், ஜிதேஷ் சர்மா, ஹர்ஷித் ராணா ஆகியோர் விளையாடுவார்கள் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

உலகக்கோப்பை டுவெண்டி – டுவெண்டி கோப்பையை வென்ற இந்திய வீரர்கள் பார்படாஸில் நிலவும் மோசமான வானிலை காரணமாக இந்தியா திரும்பாத நிலையில் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

***End of News***